Registered as a NewsPaper பக்கங்கள் 06 விலை ரூபா: 5 00

நல்லூர் கிளை நூலகம்
மாநகர... யாழ்ப்பாணம்

ஈழநாதம்

THE EELANAATHAM PeoplesDaily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 11 (23-02-1992) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 05

## 3ஆம் உலகில் பிரச்சினை வறுமையும் திட்டமிடலும்

தற்போது சனத்தொகைப் பெருக்கத்தை ஒரு பிரச்சினையாக நாடுகள் கருதுவதில்லை. அபிவிருத்தியை சரியாக திட்டமிடுவதும் வறுமையை ஒழிப்பதுமே உண்மையான பிரச்சினைகளாகும் என்று பாங்கொக்கில் உள்ள யுனெஸ்கோ அலுவலக பிராந்திய ஆலோசகர் பேராசிரியர் அன்சார் அலிகான் கூறியுள்ளார். சனத்தொகைக் கல்வியும், வாழ்க்கைத்தரமும் என்ற தலைப்பில் கொழும்பில் ஒரு கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய அவர் (6 ஆம் பக்கம் பார்க்க)

# திருகோணமலையில் இனக்கலவரம்

# ஏற்படும் ஆபத்தான சூழ்நிலை

## தமிழருக்கு எதிராக வன்முறையை தூண்டிவிட இராணுவம் முயற்சி

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக இனக் கலவரம் ஏற்படும் ஆபத்தான சூழ்நிலை உருவாகி வருவதாக அங்கிருந்துவரும் செய்திகளிலிருந்து தெரியவருகிறது. திருக்கோணமலையில் விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான அதிரடித் தாக்குதல்களால் பெரிய உயிர்ச்சேதத்தைச் சந்தித்துவரும் சிங்கள ஆயுதப் படையினர் தமிழர்கள்மீது தாக்குதல்களை நடத்தி இனக் கலவரத்தை உருவாக்குவதற்குத் திட்டமிட்டுவருவதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. நேற்று முன்தினம் திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள மூதூரில் இரு பெண்கள் உட்பட ஐந்து தமிழர்கள் படையினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்தஇரண்டு மாதங்களாக விடுதலைப் புலிகளின் படை அணிகள் சிங்கள ஆயுதப்படைகள் மீது தொடர்ச்சியான வெற்றிகர அதிரடித் தாக்குதலை நடத்திவருவதும், இதனால் பெருந்தொகையில் படையினர் சொல்லப்பட்டுள்ளதும் தெரிந்ததே. சீனன்குடா விமானப்படைத் தளத்தில் நிகழ்ந்த பயங்கர குண்டு வெடிப்புச் சம்பவத்திலும் மற்றும் அதிரடித் தாக்குதல்களிலும் 200 க்கும்மேற்பட்ட படையினர் உயிரிழந்துள்ளனர். இதனால் ஆத்திரமடைந்துள்ள சிங்கள ஆயுதப் படையினர் தமிழர்கள் மீதும் தாக்குதல்களை நடத்தி, சிங்களக் காடையர்களையும் ஏவிவிட்டு ஒரு இனக்கலவரத்தைத் தூண்டிவிட முயற்சிப்பதாகத் தெரிகிறது. இதனால் திருக்கோணமலை நகரிலும் மற்றும் தமிழர் வாழும் கிராமங்களிலும் ஒருபதற்றநிலை தோன்றியிருக்கிறது.

இந்த நெருக்கடியான சூழ் (6ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்க ஊழியர்கள் மட்டுநகரில் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகர்ப்பகுதிக்கு உத்தியோகத்திற்காக சென்ற அரசாங்க ஊழியர்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் கடந்த வியாழனன்று இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

உத்தியோகத்திற்காக சென்ற இவர்களை பொது மைதானத்திற்கு அழைத்துச் சென்ற இராணுவத்தினர் தொடர்ந்து இருதினங்கள் மைதானத்திலேயே தடுத்து வைத்திருந்துள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 20 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்டோர் இராணுவ முகாம்களிற்குக் (6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளும் மு.காங்கிரசும் வெல்லவேண்டியசக்தியாம்

### - அமைச்சர் மன்சூர்

(அம்பாறை)

இந்தநாடு இரண்டு சக்திகளை வெற்றி கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது. ஒன்று விடுதலைப்புலிகள் மற்றது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் தெரிவித்தார்.

சிறிலங்கா ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் பல பிரச்சினைகளை இந்த அரசாங்கம் தீர்த்து வைத்துள்ளது. அதேபோல் இந்த இரண்டு சக்திகளையும் நாம் எதிர்கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சேவை மறந்து வியாபாரம் சுசில் முனசிங்க கவலை

(கொழும்பு)

அண்மைக்காலத்தில் இலங்கைத் தெருப் போக்கு வரத்தில் அரசு மேற்கொண்ட மாற்றங்கள் சேவையை மறந்து வியாபாரமாக மாறியுள்ளதாக மேல் மாகாண முதலமைச்சர் சுசில் முனசிங்க கவலை தெரிவித்துள்ளார்.

தனியார் மயமாக்கலில் ஏற்பட்ட அரசியல் தலையீடுகளும் அரசியல் குரோதங்களுமே இதற்குக் காரணம் எனக் குறிப்பிட்ட அவர் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் வரவு செலவுத்திட்டத்திற்கு தேவையான நிதியைப் பெறும் போது உலக வங்கி தெரிவித்த கருத்தின்படியே இப் பஸ்சேவையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

## ராமானுஜம் கப்பல் மூலம் அகதிகள் மன்னார் வருகை

(சென்னை)

இலங்கைத் தமிழ் அகதிகளைக் கொண்ட 129 குடும்பங்கள் ராமேஸ்வரத்திலிருந்து நேற்றுப் புறப்பட்டன என்று தமிழக அரசின் அதிகாரி ஒருவர் சென்னையில் தெரிவித்துள்ளார்

இந்த அகதிகள் ராமானுஜம் கப்பலில் மன்னாருக்கு சென்றுள்ளனர் என்றும், மொத்தமாக 511 பேர் இவற்றில் அடங்குவர்என்றும் கப்பலுக்கு காவலாக இந்தியக் கடற்படை பாதுகாப்பு குழுவொன்றும் சென்றுள்ளதாக அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இக் கப்பலே ராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்குச் செல்லும் முதலாவது குழுவென்றும் அந்த அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

சென்னையில் இருந்து அகதிகள் அடங்கிய ஐந்து அணிகள் ஏற்கனவே திருக்கோணமலைக்கு சென்றுள்ளனர் என்பது தெரிந்ததே.

## வங்கிகளே தனியாரிடம் கடன்பெற வழி என்ன?

### -பந்துலகுணவர்த்தன

(கொழும்பு)

சிறு முதலீட்டாளர்களுக்கும் சனசக்தித் திட்டத்திற்கும் விவசாயிகளுக்கும் கடன் கொடுத்துவரும் அரச வங்கிகள் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டால் பொதுமக்களுக்கு யார் கடன்கொடுக்க முன்வருவார்? என மக்கள் ஐக்கிய முன்னணி எம். பி. பந்துல குணவர்த்தன பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பியுள்ளார்.

1977 ஆம் ஆண்டுக்குப்பின்னர் பதவிக்குவந்த ஐ.தே.க. அரசாங்கத்தின் திறந்தபொரு (6 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் சிறிலங்கா இராணுவத்தால் குடிசைகளுக்குத் தீவைப்பு; தமிழ் மக்கள் பலர் கைது

அம்பாறை மாவட்டத்தில் குடுமிமலைப் பகுதியில் உள்ள தமிழ் மக்களின் குடிசைகள் பல இராணுவத்தினரால் எரிக்கப்பட்டுவிட்டன.

கடந்த இரு வாரமாக அங்கு நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின்போது இந்தக் குடிசைகள் எரிக்கப்பட்டன.

சிறிலங்கா இராணுவத்தினர் நடாத்திய தாக்குதல்களால் சொந்த இடங்களில் இருந்து வெளியேறி குடுமிமலைப்பகுதி காடுகளில் வசித்துவந்த மக்களின் குடிசைகளே இவ்வாறு எரிக்கப்பட்டன.

அந்த இராணுவ நடவடிக்கையின்போது பல பொதுமக்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## இராணுவ வெற்றி சந்தேகமே பாராளு.வில் சு. க. எம். பி.

### கே. பி. ரட்நாயக்க

''வடக்கு கிழக்கு பகுதிகளில் கடந்த இரண்டு மாதங்களாக இடம்பெற்றிருக்கும் சம்பவங்களை நோக்கும்போது அரசின் நடவடிக்கை சாதகமான பெறுபேறுகளை அடைய முடியுமா என்பது சந்தேகமே'' எனஅநுராதபுரம் மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி கே. பி ரட்நாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த நாட்டின் இருபெரும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் அவற்றின் நடைமுறையை மாற்றி நாட்டின் நலன் கருதி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சகல முயற்சிகளையும் [6 ஆம் பக்கம் பார்க்க]

## இனப்பிரச்சினையைத்தீர்க்க கூட்டுச்செயற்பாடுவேண்டும்

### - பிரேமதாசா

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு நாம் அனைவரும் கூட்டாகப் பாடுபட வேண்டும் என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கூறியுள்ளார்.

கொழும்பில் இடம் பெற்ற சமய நிகழ்ச்சியொன்றில் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இப்பகுதி மக்கள் புறக்கணிக்கப் பட்டு அவர்களுக்கு அநீதி இழைக்கப்படுமானால் அவர்கள் பயங்கரவாதத்தில் ஈடுபட்டுள்ள குழுக்களின் பக்கம் மீண்டும் ஈர்க்கப்பட்டு விடுவார்கள்.

ஒரேஒரு குழுவைத் தவிர ஏனைய எல்லாக் குழுக்களும் ஜனநாயக மார்க்கத்தில் இணைந்துள்ளன என்றும்,

புத்தபெருமான் காட்டிய வழியில் தீர்வுகளைக் காணும் பொறுப்பு சிங்கள பௌத்தர்களுக்கு உரியதென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம் கனேமுல்ல அமர விகாரையில் நேற்று முன்தினம் பௌத்த குருமார்களோடு நடைபெற்ற சந்திப் (6ஆம் பக்கம் பார்க்க)

# 6-ம் மாத நினைவலைகள்



## லெப்டினனன்ட் தருமன் (ரவி)

(இராசதுரை ரவீந்திரகுமார்)

வீரப்பிறப்பு 05.11.1971 வீரச்சாவு 28.08.1991

புயலுக்குப் புறங்காட்ட புறப்பட்ட தருமா
புகழேணிக் கொம்பரின் உச்சத்தில் நின்றாய்
வயலோர வரம்புகளின் சிறு புல்லுகூட
துணையாக தலைநிமிர்த்தி உன்புகழைப்பாடும்
வசந்தத்தின் வாசலிலே கருகிவிட்ட மலர்நீ அன்றன்று
மொட்டவிழ முன்பாக விதையான வீரமலர் நீ
அன்றோ !
பெரும்காற்று கொடுவீசி மலர்தனையே வீழ்த்தும்
மலர்வீழ்நத இறுமாப்பில் புயல் முறுகிச் செல்லும்
மண்மீது வீழ்ந்த மலர் மண்ணாகிப் போகும்
என்று இறுமாந்த புயல் உறுமித்திரியும்
மண்மீது வீழ்ந்தமலர் விதையொன்றைக் கொண்ட
விந்தையினை காணாத புயல் முழக்கம் செய்யும்
துளியொன்று பட்டவுடன் விதை விழித்துக்கொள்ளும்
துணிவுடனே மண்கீறி நீர் தேறச் செல்லும்
முறையான மரமாகி விண்முட்ட வளரும்
இனிபுயல்வந்தால் புறங்காட்டிஅறயோடு செல்லும்

இம் மாவீரனையும் இவரின் சகோதரனான மாவீரன் மகானையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

அப்பா, அம்மா
தங்கைகள்,
தம்பி, உறவினர்,
நண்பர்கள்.

மகான் வீதி
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

[சி/3941]

---

கட்டைவேலி - நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்
(மட்டுப்படுத்தப்பட்டது)

## பதவி வெற்றிடம்

பதவி: கணக்காளர்

தகைமைகள்:

அ) கூ. வே ஆணைக்குழுவின் 8ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்கியல் / உள்ளகக் கணக்காய்வு பதவியில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூ. வே. ஆ. குழுவின் 9ஆவது சம்பளத் திட்டத்தின் உள்ளக கணக்காய்வாளர் / கணக்கியற் பகுதியில் 6 வருடங்களுக்குக் குறையாதஅனுபவம்.

அல்லது

ஆ) ஐக்கிய சாம்ராஜ்ய கல்விநிலையத்தில் கணக்கு பதிவாளர் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த கணக்கியல் பகுதியில் 4 வருடங்கள் மேற்பார்வை செய்த அனுபவங்கள் அல்லது வர்த்தக நிறுவனம் அல்லது கைத்தொழில் நிறுவனத்தில் எண்பார்வை செய்த அனுபவம்.

அல்லது

இ) கூ. வேலையாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) சித்தி / க. பொ. த. உயர்தரம் கணக்கியல் பாடத்துடன் மூன்று பாடங்களில் சித்தியுடன் வெளிக்கள கணக்கியல் / எண்பார்வை பகுதியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

சம்பள அளவுத்திட்டம்:
104/7 09 1165-60x 3-75x 11 -- 2170/-

குறிப்பு:- விண்ணப்பங்கள்யாவும் 01.03.92-ம் திகதிக்கு முன்னதாக தலைவர் கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி, என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்

கட்டைவேலி- நெல்லியடி,
ப. நோ கூ. சங்கம்,
சரவெட்டி.

(சி 3949)

---

## வரி விளம்பரம்

**மணமக்கள்தேவையா**

எம்மிடம் வெளிநாட்டு உள்நாட்டு மணமக்களும் மாற்றுச் சம்பந்தத்தை விரும்புவோரும் அல்லாதோரும் நிறைய இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம் (2237)

**தவறிவிட்டது**

17 2. 92 திங்கட்கிழமை முத்திரைச்சந்திக்கும் கோப்பாய்க்குமிடையில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரமும் இரு குறிப்புக்களும் தவறிவிட்டன. கண்டெடுத்தோர் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும், பெ. தாசன் சரசாலை வடக்கு சரசாலை. (2239)

## தூக்கிட்டு தற்கொலை

வவுனியா கருவேப்பங்குளம் பகுதியில் முதியவர் ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

கடந்த 19ஆம்திகதி இரவு வீட்டுக்காரர் நித்திரையில் ஆழ்ந்திருந்த சமயம்காணியில் உள்ள மாமரம் ஒன்றில் கயிறு கட்டிதூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

செல்லன் இராசையா (வயது70)என்ற முதியவரே தற்கொலை செய்துகொண்டவர். இதற்கான காரணம் அறியப்படவில்லை.

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் அவையால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இடைநிறுத்தப்பட்டஅரை இறுதி, இறுதி ஆட்டங்கள் மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

அரைஇறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை 3.00 மணிக்கும், இறுதியாட்டம் வரும் செவ்வாய்க் கிழமை மாலை 3.00 மணிக்கும் நடைபெறும்.

## சுகாதார வாரம் இறுதிநாள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை நடாத்தும் சுகாதார வாரத்தின் இறுதிநாள் நிகழ்ச்சிகள் இன்று பிற்பகல் 2.00மணிக்கு பலாலி ஆசிரிய கலாசாலையில் (திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயம்) நடைபெறும்.

## மாணவர் உணவு முத்திரை

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்கான டிசம்பர், ஜனவரி மாத மாணவ உணவு முத்திரைகள் யாழ். செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

இதுவரை தேவையான முத்திரைகளின் எண்ணிக்கை, உச்ச பெறுமானத்தின் அளவு ஆகிய விபரங்களை அறிவிக்காத பாடசாலை அதிபர்கள் அவற்றை அறிவித்து தத்தமது பகுதி பிரதேச செயலாளரிடம் தமக்குத் தேவையான முத்திரைகளைப் பெற்று மாணவர்களுக்கு வழங்குமாறு சமூக சேவைப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (ச)

## ‘மணலாறு’ அறிமுக விழா

‘மணலாறு’ நூல் அறிமுக விழா இன்று ஞாயிற்றுகிழமை பிற்பகல் 4.00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சு டிவகலாலா தலைமையில் நடைபெறவுள்ளது.

சிறப்புரையினை கலாநிதி சிற்றம் பலம், கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை மற்றும் தமிழீழவிடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்களும் ஆற்றவுள்ளனர். (24)

---

## சத்தியவான்-சாவித்திரி இசைநாடகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ் மன்றத்தின் ஆதரவில் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி இ. பாலசுந்தரத்தினது தயாரிப்புநெறியாழ்கையில் யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற்கழகம் வழங்கும் சத்தியவான் சாவித்திரி இசை நாடகம் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் மேடையேறுகின்றது.

---

# 45- வது நினைவு தினம்



வீரஜனனம்: 31. 4. 1968

வீரச்சாவு: 10. 1. 1992

துணைப்படை வீரர் (ரவி)

## சுப்பிரமணியம் ரவீந்திரன்

சின்னத்தம்பி கடைசித்தம்பி
செல்லமாய் வளர்ந்த பிள்ளை
ஒன்று பட்ட இதயத்திலே
ஒரு நாளும் பிரிவு இல்லை
ஆசைக் கோர் தம்பியேனா
ஆண்டவனும் தந்து விட்டான்
வீரத்துடிப்புடனே 1984 தொடக்கம்
விடுதலைப் புலிக்கு துணைப்படையாய்
எட்டு வயதிலே நீ ஓட்டிய வாகனம்
இன்றும் என் நெஞ்சில் பதிந்தது என் தம்பி
நீ எங்கே றோஜாவின் இதழ்களைப் போல்
தீராதபாசத்தை
மீண்டும் நாம் சோதரராய் கல்லறையில்நாம்சேர்வோம்
நிச்சயம் உன் எண்ணம் நிறைவேறும் என் தம்பி

23. 2. 92 ஞாயிற்றுக்கிழமை (இன்று) நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் வீட்டுக் கிருத்தியத்திலும் கலந்து கொள்ளுமாறு சக போராளிகளையு , நண்பர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

கரணவாய் மேற்கு,
கல்லுவம்

குடும்பத்தினர்
(2235)

---

# நினைவு கூருகின்றோம்

**1992-02-23**

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் நாயாற்று வெளிப்பகுதியில் சிறிலங்காப் படையினரின் சுற்றி வளைப்பின் போது வீரச்சாவெய்திய

**விஜி** (சூசைப்பிள்ளை றேமன் றெக்கிளாஸ் - தேனுடையான், மன்னார்)

யாழ். நல்லூரில் சிறிலங்கா இராணுவத்தினரின் திடீர்த் தாக்குதலுக்கிலக்காகி வீரச்சாவெய்திய

**2-ம் லெப். வெள்ளை** (பேனாட் எட்வேட் ஸ்ரக் இருதயபுரம், மட்டக்களப்பு)

1988 ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**குமரன்** (பிச்சை அன்பரசன் - அளம்பில், மணலாறு)

1989 ஆம் ஆண்டு விசாரமலைப் பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**தயா** (தம்பிராசா தயாபரன் - கோயில் போரதீவு, மட்டக்களப்பு)

**பீற்றர்** (குமாரசிங்கம் நடராசா - முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை)

துன்னாலையில் இந்திய இராணுவத்தினரின் எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட இளம் பெண்

திக்கத்தில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நாலு பொது மக்கள்

1991 ஆம் ஆண்டு சந்திவெளியில் சிறிலங்காப் படையினர் தாக்கியதில் வீரச்சாவெய்திய

**ஜோண்சன்** (கோபால் - சந்திவெளி, மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/3952)

மாநகர யாழ்ப்பாணம்

# சீனா மீதான வர்த்தகத் தடை நீக்கப்படும் என அமெரிக்கா அறிவிப்பு

(வாஷிங்டன்)

சீனாவுக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த வர்த்தகத் தடைகளை நீக்கப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது' மூன்றாம் உலக நாடுகளுக்கு அணுவாயுத ஏவுகணைத் தொழில்நுட்பத்தை ஏற்றுமதி செய்யப் போவதில்லையென சீன அரசு அமெரிக்காவிற்கு உத்தரவாதம் அளித்துள்ளதைத் தொடர்ந்து இம்முடிவு எடுக்கப்பட்டதாக வெள்ளை மாளிகைப் பேச்சாளர் கூறியுள்ளார்.

உயர் தொழில் நுட்பத்திறன் வாய்ந்த கம்பியூட்டர்களையும், பிறதொழில் நுட்பங்களையும் இரண்டு சீன நிறுவனங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கு கடந்த ஆண்டு யூன் மாதம் முதல் அமெரிக்க அரசு தடை விதித்திருந்தது தெரிந்ததே.

ஈராக், பாகிஸ்தான் போன்ற மூன்றாம் உலக நாடுகளுக்கு சீனா அணுத் தொழில் நுட்பத்தைக் கொண்ட ஏவுகணைகளை அல்லது அணுவாயுத தொழில்நுட்பங்களை விற்பனை செய்யப் போவதில்லையென்று அமெரிக்க அரசுக்கு உத்தரவாதம் அளித்ததைத் தொடர்ந்து அமெரிக்க சீன இருதரப்பு வர்த்தக உறவுகளில் சுமுகநிலை ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

## பொ. தடை நீடிக்க ஆதரவு

(ஜெனிவா)

நிறவெறி முற்றாக களையப்படும்வரை தென் ஆபிரிக்காவிற்கு எதிரான பொருளாதாரத்தடை நீடிப்பதற்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆதரவு தெரிவித்துள்ளது.

# கம்போடிய அமை. பணிக்கு இருநூறு கோடி செலவு

## -பூட்டோஸ் கலி

(நியூயோர்க்)

இருபதினாயிரத்துக்கும் அதிகமாக இராணுவத் துருப்புக்களையும், பொது மக்களையும் ஈடுபடுத்தும் அமைதி காப்புப் பணியை கம்போடியாவில் செயற்படுத்த வேண்டும் என ஐ.நாவின் தலைமைச் செயலர் டாக்டர் பூட்டோஸ் கலி யோசனை தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் தனது அறிக்கையில்: இந்த பணிக்கு இருநூறு கோடி டொலர் செலவாகும் எனவும் இது ஐ.நா வரலாற்றிலேயே மிகப்பெரும் அளவில் செய்யப்படும் பணியாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாரிஸில் கையெழுத்தான அமைதி உடன்படிக்கையின்படி ஐ.நா அமைதிப் படையானது போர் நிறுத்தத்தைக் கையாளவும், போரில் ஈடுபடும் குழுக்களின் ஆயுதங்களைக் கைப்பற்றவும் இந்திய - சீன போர்களின் விளைவாக பல ஆண்டுகளாக உருவாகியுள்ள துயர நிலைகளை முடிவுக்கு கொண்டுவரக்கூடிய தேர்தல் வழிவகைகளில் ஈடுபடவும், இத்தேர்தல்கள் அடுத்த ஆண்டு மே மாதம் நடைபெறவுள்ளதால் இத்தேர்தல்கள் சுதந்திரமாக நடாத்தக்கூடியதாக உள்ளூர் சர்வதேச ஏஜென்சிகளிடம் இருந்தும் 3,500 உறுப்பினர்கள் கொண்ட ஐ.நா அமைதிப் படையையும் இது கொண்டிருக்கும் எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் இதற்கு இந்தியா, பிரான்ஸ் கானா, சிம்பாவே, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் இந்தோனேசியா, மலேசியா, உட்பட பலநாடுகள் துருப்புக்களை அனுப்பும் என எதிர் பார்க்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

# அமைதியான பஞ்.தேர்தல் தாக்கத்தை ஏற்படுத்தும்

## - எஸ். பி.சவான்

(பட்னா)

பஞ்சாப்பில் திருப்தியான முறையிலும் அமைதியான முறையிலும் தேர்தல்கள் நடைபெற்றதானது காஷ்மீரிலும் ஒரு நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும் என இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி சவான் குறிப்பிட்டுள்ளார்.

பீகாரில் இருந்துதிரும்பும் போது செய்தியாளர்களிடம் பேசிய அவர் பஞ்சாபில் மத்தியஅரசாங்கம் பொருளாதார சலுகைத் திட்டங்கள் எதனையும் அறிவிக்குமா என நிருபர் வினவியபோது அந்த மாநிலத்தில் பொருளாதார பிரச்சினைகள் இருந்துவருகின்றன. எனவே அதுவிடயத்தில் பஞ்சாபில் அக்கறை எடுக்க வேண்டும் எனவும் எஸ்.பி.சவான் குறிப்பிட்டார்.

### பாரதீய ஜனதா குறித்து

# காங்கிரசின் வேண்டுகோள் ஆ. குழுவால் நிராகரிப்பு

(டில்லி)

பாரதீய ஜனதாக் கட்சியின் அங்கீகாரத்தை விலக்கிக் கொள்ளுமாறு இந்திரா காங்கிரஸ் விடுத்தவேண்டுகோளை தேர்தல் ஆணைக்குழு நிராகரித்துள்ளது.

முன்னதாக இந்திரா காங்கிரஸ் ராமஜென்மபூமி ரதயாத்திரையில் பாரதீய ஜனதாக் கட்சி தனது சின்னமான தாமரையை பயன்படுத்தியதனால் அக்கட்சிக்கான அங்கீகாரத்தை விலக்கிக் கொள்ளுமாறுதேர்தல்ஆணைக்குழுவை கேட்டிருந்தது.

இந்தவேண்டுகோளை தேர்தல் ஆணைக்குழு நிராகரித்துள்ளது.

இதேநேரம் இந்திய காங்கிரஸ் சோசலிஸ்ற் சரத்சந்திர சிங்காசமாஜ்வாதி ஜனதாதள் லோக்தள் ஆகியமூன்று தேசிய கட்சிகளுக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரத்தை தேர்தல் ஆணைக்குழு விலக்கிக் கொண்டுள்ளது. சமாஜ்வாதி ஜனதாதள் லோக்தள் மாநில கட்சிகள் என்று கூட சொல்ல முடியாதவாறு தகுதியிழந்துள்ளன என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஆனால் இந்திய காங்கிரஸ் சோசலிச சரத் சந்திரசிங்கா கேரளத்திலும் மணிப்பூரிலும் ஒரு மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

கடந்தவாரம் நடந்த லோக்சபா தேர்தல்களிலும், 1988, 1991ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தல்களிலும் இந்தக் கட்சிகளுக்கு கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் இவற்றிற்கான அங்கீகாரத்தை விலக்கிக் கொண்டதாகவும், இக் கட்சிகள் விலக்கிக் கொள்ளப்பட்டதை அடுத்து ஆறு தேசியக் கட்சிகளும் முப்பத்திநான்கு மாநிலக் கட்சிகளுமே இந்தியாவில் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரிந்த குடியரசுகள் ஆயுதக் குறைப்புப்பற்றி அறிவிக்கும்

(லண்டன்)

முன்னையசோவியத் யூனியனின்குடியரசுகள்சிலநேட்டோ ஸ்தாபனத்துடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி உள்ளன.

இப் பேச்சு வார்த்தைகளில் இன்னும் ஐந்து மாத காலத்துக்குள் ஐரோப்பாவிலே ஆயுதப்பாவனை குறைப்பது தொடர்பான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது பற்றியும், இராணுவம் சம்பந்தமான மாறுபட்ட கருத்துக்களை நீக்குவது பற்றியும் உடன்பாடு கண்டுள்ளன.

ஐரோப்பாவில் சம்பிரதாய ஆயுதப்பாவனை தொடர்பான உடன் படிக்கை 1990 ஆம் ஆண்டு இருபத்திரெண்டு நாடுகளினால் கைச்சாத்திடப்பட்டன.

கெடுபிடிப்போரின் பின்னரும் உறுதியான நிலையில் இந்த உடன்படிக்கை இருந்து வருவதாக பலராலும் கருதப்பட்ட போதும் சோவியத் யூனியன் சிதைவடைந்ததின் பின்னரும் அணு ஆயுதப் பாவனை இருந்து வருகிறது.

எனவே சோவியத் யூனியனில் இருந்து பிரிந்த குடியரசுகள் இது தொடர்பாகஇணக்கம் காணுமா என்று இது வரை அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை இது தொடர்பான கூட்டத்தில் நேட்டோ வெளியிட்ட அறிக்கையொன்றின் படி யெல்சினுடன் உச்சி மாநாட்டுக்கு முன்னர் உடன் படிக்கையின்படி இணக்கம் காணப்படலாம் எனத் தெரிவிக்கப் படுகிறது.

ஐரோப்பாவில்பந்தோபஸ்து ஒத்துழைப்பு தொடர்பாக 48 நாடுகள் கலந்து கொள்ளும் உச்சிமாநாடுஎதிர்வரும் யூலை மாத மத்தியில் இடம் பெறலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

# முதல்வரின் பாதுகாப்பிற்கு நாளாந்தம் 2 லட்சம் ரூபா

(சென்னை)

தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அண்மையில் காங்கேயன், பர்கூர் ஆகிய தொகுதிகளுக்குச் சென்றுவந்தது குறித்து மதுரையில் நாஞ்சில் மனோகரன் குறை கூறினார்.

தமிழக அரசு சார்பில் செல்வி ஜெயலலிதா இத்தொகுதிகளுக்குப் போய் வந்ததில் ஒரு கோடி ரூபா செலவிடப்பட்டிருக்கிறது என்றும். தமிழகத்தின் முன்னைய முதலமைச்சர்களின் பாதுகாப்புக்கு அரசு செலவு செய்திருந்தகாயினும், இப்போது ஜெயலலிதாவின் பாதுகாப்புக்கு அரசு தினமும் இரண்டு லட்சம் ரூபா செலவழிக்கிறது என்றும் அவர் கண்டனம் தெரிவித்தார்.

## இந்தோனேசியாவில் நிலநடுக்கம்

இந்தோனேசியாவின் சில பகுதிகளில் நேற்றுக்காலை நிலநடுக்கம் ஏற்பட்டது: 5.5 அளவை எட்டிய இந்த நிலநடுக்கம ஜகார்த்தாவிலிருந்து 2500 கிலோமீற்றர் வரை பாதிக்கப்பட்டுள்ளது.

# பாக். அணுவாயுத திட்டம் அவுஸ். கண்டனம்

அணுவாயுதங்களைத் தயாரிப்பதற்கு வேண்டிய எல்லாப் பாகங்களும், தொழில் நுட்ப அறிவும் தன்னிடமிருப்பதாகப் பாகிஸ்தான் ஒப்புக் கொண்டிருப்பது குறித்து அவுஸ்ரேலியா கவலை தெரிவித்திருக்கிறது.

உலக அணுவாயுதக் குறைப்புக்கான முயற்சிகளுக்கெதிராகப் பாகிஸ்தானின் அணுவாயுதத் திட்டம் அமைந்திருக்கிறது என்று அவுஸ்ரேலியாவின் வெளியுறவு மற்றும் வர்த்தக அமைச்சர் செனேற்றர் ஈவான்ஸ் கூறியதாக இஸ்லாமாபாத்தில் அவுஸ்ரேலிய உயர் ஸ்தானிகராலயம் வெளியிட்ட செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

# போபர்ஸ் தொடர்பான உண்மைகளை வெளியிடுக

போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் வழக்கு தொடர்பாக அனைத்து உண்மைத் தகவல்களையும் சுவீடன் அதிகாரிகளிடம் இருந்து பெறுமாறு ஜனதாதள் இந்திய அரசை வற்புறுத்தி உள்ளது.

போபர்ஸ் நிறுவனத்தை சுவீடன் அரசு தனது பொறுப்பில் ஏற்றுக் கொண்டு இருப்பதால் இவ் வழக்கு தொடர்பான முழு விபரங்களையும் இந்திய அரசு எளிதாக பெற்றுக் கொள்ள முடியும் எனவும் ஜனதாதள் கட்சி பிரதிநிதி ஒருவர் நேற்று முன் தினம் தெரிவித்தார்.

இதேவேளை இவ் வழக்கு தொடர்பாக சமீபத்தில் வெளியான செய்திகள் ராஜீவ் காந்தியின் பெயருக்கு ஊறு விளைவிக்கும் நோக்கமுடையவை எனக் கூறி காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் டில்லி, சுவீடன் தூதரகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

போபர்ஸ் பீரங்கி பேரத்தில் முன்னாள் இந்தியப் பிரதமர் காலஞ் சென்ற ராஜீவ் காந்தி உட்படப் பல உயர் இந்திய அரசியல் வாதிகளுக்கு லஞ்சம் வழங்கப்பட்டது உண்மையே என்று சுவீடன் போபர்ஸ் நிறுவன உயர் அதிகாரி ஒருவர் ஒப்புக் கொண்டது. தெரிந்ததே.

### இந்திய - சீன

# எல். பிரச்சினை தொடர்பாக இரா. அதிகாரிகள் சந்திப்பு

(டில்லி)

இந்திய - சீன எல்லைத் தகராறு தொடர்பாக இந்த நாடுகளைச் சேர்ந்த ராணுவ அதிகாரிகள் ஒவ்வொரு வருடமும் யூன் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் சந்தித்துப் பேசவுள்ளனர்.

டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்திய சீன கூட்டு செயற்குழுவின் நான்காவது கூட்டத்தில் இந்த ஒப்புதல் எடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இரு நாட்டின் ராணுவ அதிகாரிகளும் கிழக்கத்தைய அரங்கிலுள்ள கும்லா கணவாய்ப் பகுதியிலும், மேற்கத்தைய அரங்கில் சோம்பூர் இடைவெளிப் பகுதியிலும் கூட்டங்களை நடத்துவர்.

### தடா சட்டத்தின் கீழ்

# தடுத்து வைத்துள்ளோர் மீது தொடர்ந்தும் சித்திரவதை

## - கருணாநிதி

சென்னை மத்திய சிறையில் தடா சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் சித்திரவதை செய்யப்படுகிறார்கள் என்று தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

உலகம் முழுவதும் ராஜீவ் காந்தி கொலை வழக்கை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது என்றும், இந்த நேரத்தில் உண்மையான குற்றவாளிகளை மறைப்பதற்குத் திசைதிருப்பும் காரியங்களில் ஈடுபட்டால் உலகத்தின் பார்வையில் இந்தியா கேலிக்குரியதாகி விடும் என்றும் கூறினார் கருணாநிதி.

# 500 ரூபாய் கள்ளநோட்டு புழக்கத்திலுள்ளது

(கொழும்பு)

புழக்கத்தில் புதிய 500ரூபா கள்ளநோட்டுக்கள் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இக் கள்ளநோட்டிலுள்ள பாதுகாப்புக்குறியீடு தெளிவாகஇருக்கவில்லையெனவும் அதிலுள்ள இலக்கங்கள் உண்மையானநோட்டில்உள்ள இலக்கங்களை விட சிறியதாகவும் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கள்ளநோட்டு தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# எயிட்ஸ் பரிசோதனைக்கு சட்டம் கொண்டுவரப்படும்

எயிட்ஸ் நோய் பரவுவதை தடுக்கும் சுகாதார அமைச்சின் திட்டத்தின் ஒரு பகுதியாக கட்டாயமாக எயிட்ஸ் பரிசோதனை செய்து கொள்ளும் சட்டம்இயற்றுவதற்கு அமைச்சரவை கடந்த புதன் கிழமை முடிவு செய்துள்ளது

இதற்கான நகல் சட்டம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் வீக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

இந்தச்சட்டத்தின் கீழ்ஆய்வு கூடங்கள் எயிட்ஸ் இலவச வைத்திய அத்தாட்சி பத்திரங்கள் விநியோகித்தல் தகவல் கொடுக்காமல் விடுதல் குற்றமாக்கப்படுதல், இந்த விதிகளை மீறுவோர் ஆகக் கூடுதலான தண்டப்பணமாக 50,000 ரூபா விதிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்

## பதவி வெற்றிடங்கள்

### பச்சிலைப்பள்ளி தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கம்

1. கணக்குப் பதிவாளர் - குறியீடு- 301-8
   - வேதனம்- 1045- 1705
   - 40X4 - 50X10

தகைமைகள்:-

அ. கூட்டுறவுப் பணியாளரின் 9 வது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் கணக்கு அல்லது கணக்காய்வு லிகிதர் பதவியிலான 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது, கூட்டுறவுப் பணியாளரின் 10 வது சம்பளத் திட்டத்திலான இதை ஒத்த பதவியில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. ஐக்கிய இராஜ்ஜியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் முடிவு நிலை பரீட்சையில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத் துறையிலான 02 வருடத்திற்கு குறையாத அனுபவமும் அல்லது ஐக்கிய இராஜ்ஜியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத் துறையிலான 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர் தரம்) க. பொ. த. (உயர்தர) கணக்கியலை உள்ளடக்கியதான மூன்று பாடங்களில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத் துறையில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

2. லிகிதர் - குறியீடு - 302 - 8
   - வேதனம்- 1005 - 1705
   - 40X5 - 50X10

தகைமைகள்:-

அ. கூட்டுறவுப் பணியாளரின் 9 ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் / லிகிதர் பதவியில் 03 வருடங்களுழக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10 வது சம்பளத்திட்டத்தில் இதை ஒத்த பதவியில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஐக்கிய இராஜ்ஜியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் முடிவு நிலைப் பரீட்சையிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்குத்துறை தொடர்பிலான பதவியில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராஜ்ஜியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்குத்துறை தொடர்பிலான பதவியில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர் தரம்)/ க. பொ. த. (உயர்தரம்) இல் மூன்று பாடங்களில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத்துறை தொடர்பிலான பதவியில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவமும்.

வயது:- இரு பதவிகளுக்கும் விண்ணப்ப முடிவு திகதியில் 21க்கும் 40க்கும் இடைப்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

குறிப்பு:- 1. சங்கப் பணியாளர்களுக்கு உரித்தான மேலதிகப் படிகளும் வழங்கப்படும்.
2. சங்கப் பணியாளர்களுக்கும், சங்க எல்லைப் பரப்பிற்குட்பட்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் 05. 03. 1992 அன்று அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக 'தலைவர், பச்சிலைப்பள்ளி தெ. ப. பொ. கூ. சங்கம்- பளை' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்,
பச்சிலைப்பள்ளி தெ.ப.பொ.கூ. சங்கம்,பளை.

(2238)

## ராஜீவ் கொலை வழக்கில்

# எவரும் ஆஜராகாது தடுக்க; வழக்கறிஞர்வீரசேகரன்கைது

ராஜீவ் காந்தி கொலை செய்யப் பட்டதைத் தொடர்ந்து தமிழகத்தில் ''தடா'' சட்டத்தின் கீழ் வழக்கறிஞர்கள் பலர் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டு வருகின்றனர். இவ்வாறு வழக்கறிஞர்கள் கைது செய்யப்படுவது தமிழக வழக்கறிஞர் மட்டத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த மாதம் 25 ஆம் திகதி ''பெரியார் இலவச சட்ட உதவிக்குழு'' என்ற வழக்கறிஞர்கள் அமைப்பொன்றின் செயலாளர்களில் ஒருவரான திரு. வீரசேகரன் என்ற வழக்கறிஞர் ''தடா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

### கைதுக்கு காரணம்:

1983 ஆம் ஆண்டு முதலே இலங்கைத் தமிழ்ப் போராளிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் பலதடவை இவ்வழக்கறிஞர் ஆஜராகி இருக்கிறார். அதன் பின்பு ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட சிலருக்காகவும் இவர் ஆஜரானார். தற்போது தமிழகக் காவல்துறையின் கியூ பிராஞ்ச் பிரிவினர் இவரைக் கைது செய்தமைக்கு பத்மநாபா கொலை வழக்கில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் கொலையாளிகள் தப்பிச் செல்வதற்குத் தூண்டினரார் என்று காரணம் கூறுகின்றனர்.

### யாருடைய கையெழுத்து?

குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக கூறப்படுவது திருச்சியில் தற்கொலைசெய்து கொண்ட சாந்தனின் அறையில் இருந்ததாகக் கூறப்படும் கடிதம். இக்கடிதம் யாரால், யாருக்கு, எழுதப்பட்டது போன்ற விபரங்கள் எதுவும் இல்லை. எனினும்காவல் துறையினரோ கையெழுத்து நிபுணர்களை வைத்து ஆராய்ந்ததில் இது வீராசேகரனின் கையெழுத்துத்தான் என்பது உறுதிப்படுத்தப் பட்டிருப்பதாக நீதி மன்றத்தில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

### ஆதாரம் எதுவும் இல்லை:-

அதேவேளை காவல்துறையினர் கைப்பற்றியதாகக்கூறப்படும் கடிதம் வீரசேகரனால் எழுதப்பட்டது என்பதற்கு எதுவித ஆதாரமும் இல்லை என்றும், அப்படித்தான் அவர் எழுதியிருந்தாலும் அது வழக்கறிஞர் தொழில் ரீதியாக தவறான செயல் அல்ல என்றும் சிரேஷ்ட கிரிமினல் வழக்கறிஞர் ஒருவர் கூறினார்.

மேலும் அவர் கூறும் போது பொதுவாக எந்த வழக்கறிஞரும் குற்றவாளிகள் தங்களிடம் வரும்போது '' சிறிது காலம் தலைமறைவாக இரு'' என்று கூறுவதுதான்வழக்கம். அந்த வகையில் இந்தக்கடிதத்திலும் ''தலைமறைவாகி விடுங்கள்'' என்று எழுதப்பட்டிருப்பது எந்த வகையில் குற்றம் என்று கேள்வி எழுப்பியிருக்கிறார்.

### தேசத்துரோகிகள் யார்?

பெரியார் இலவச சட்ட உதவிக்குழுவின் மற்றொரு செயலாளரான சேலம் அருள்மொழி என்பவருடன் பேசும் போது ''ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்ட வர்களுக்காக ஆஜராகும் வக்கீல்களையெல்லாம் இந்த அரசு தேசத்துரோகிகளாகக்கருதுவதுவேடிக்கையாக இருக்கிறது. கொலை செய்யப்படும் போது ராஜீவ் காந்தி ஒரு சாதாரண பிரஜையாகவே இருந்தார். ஆனால் இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டபோது அவர் இந்த நாட்டின் பிரதமராக இருந்தார். அந்தக் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக வாதாடிய வழக்கறிஞரும் இவர்கள் பார்வையில் தேசத்துரோகியா? அதே போல் போபால் நச்சு வாயு வழக்கில் இறந்துபோன பல்லாயிரக்கணக்கான இந்தியர்களுக் கெதிராகவும், அமெரிக்காவின் யூனியன் கார்பைட் நிறுவனத்துக்காகவும்சில வழக்கறிஞர்கள் வாதாடினார்களே இது தேசத்துரோகமாகாதா என்றும் அவர் கேட்டார்?

### குறுகிய நோக்கம்

ராஜீவ் காந்தி, பத்மநாபா கொலைவழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்காக இனி மேல் எந்த வழக்கறிஞரும் முன்வரக் கூடாதுஎன்கிறகுறுகியநோக்கத்தோடுதான் அரசு இவ்வாறு வழக்கறிஞர்களைக் கைதுசெய்து வருகிறது என்று மேலும் சில வழக்கறிஞர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

# விட்டுக்கொடுக்கவேண்டியது இனி சிங்களக் கட்சிகளே

(கொழும்பு)

நாம் விட்டுக் கொடுத்திருக்கின்றோம் இனி விட்டுக்கொடுக்க வேண்டியது சிங்களக் கட்சிகளே என்று தமிழ் எம். பி. ஒருவர் கூறினார். பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட நீடிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், புலிகளின் பிரச்சினை என்பது வேறுவிடயம், இனப் பிரச்சினை என்பது வேறு விடயம் எனவும், புலிகளின் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணவேண்டும் எனவும், இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காணவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

## பருத்தித்துறை

# இறங்குதுறை 'ஸ்தம்பிதம்' வேலைகள் அடைந்தன

கட்டடப்பொருட்கள் இன்மையால் பருத்தித்துறைதுறைமுக இறங்குதுறைப்பகுதியின் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது.

ஏற்கனவே இருந்த இறங்குதுறைப்பகுதியை திருத்தி அமைக்கவும், இறங்குதுறையை விஸ்தரிக்கவும், நீர்த்தடுப்பு அணையைக் கட்டுவதற்கும் சுமார் 600 பக்கற் சீமெந்தும் ஏனைய கட்டடப்பொருட்களும் தேவையாக உள்ளது. ஆனால் 50 பக்கற் சீமெந்துமட்டுமே கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டிருக்கிறது இவற்றைக்கொண்டு முழுமையான புனரமைப்பு வேலைகளைச் செய்யமுடியாதநிலை உருவாகியுள்ளது.

## வடபகுதிக்கு பயணிகள்

# கப்பல்போக்குவரத்துசேவை நடப்பது சாத்தியமில்லை

வடபகுதிக்கான பயணிகள் கப்பல் சேவையை நடாத்துவது சாத்தியமற்றுப் போய் விட்டது என்றும் இதற்கு அதிகளவு பணச்செலவு ஏற்படும் என்பதால் இம் முயற்சி கைவிடப் பட்டிருக்கிறது என்றும் வர்த்தகக்கப்பல்துறை அமைச்சின் செயலாளரும் முன்னாள் யாழ். அரசாங்க அதிபருமான திரு. அன்ரன் அல்பிரட் அறிவித்துள்ளார்.

கொழும்பிற்கும் பருத்தித்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவையை நடாத்துவதற்காக திரு. அன்ரன் அல்பிரட் பல முயற்சிகள் எடுத்த போதிலும் அவை பயனற்றுப் போய் விட்டன.

ஏனெனில் பயணிகள் கப்பல் ஒன்றை வாடகைக்கு அமர்த்துவதாயின் நாள் ஒன்றுக்கு ஒரு லட்சத்து அறுபதினாயிரம் ரூபா செலவு ஏற்படும் என்றும் ஒரு முறை வடபகுதிக்கான சேவையை நடாத்துவது என்றால் சுமார் 10 லட்சம் ரூபாவிற்கு மேல் செலவாகும் என்றும் கூறப்படுகிறது.

இச்செலவுகளை ஈடுசெய்யக் கூடிய வகையில் பயணிகளிடம் அதிகளவு கட்டணம் அறவிடுவது என்பது முற்றாகச் சாத்தியமற்றது என்பதால் மேற்படி முயற்சி கைவிடப்பட்டிருக்கிறது என்றும் கூறப்பட்டிருக்கிறது. (ந)

# விவசாயக் கடன் திட்டம் மீண்டும் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வட பகுதியில் இலங்கை வங்கி மூலமாக நடைமுறைப் படுத்தப்பட்டுவந்த விவசாயக் கடன்திட்டங்கள் அனைத்தும் மீண்டும் நிறுத்தப்பட்டுள்ளன.

வடபகுதியில் இராணுவத் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டு சகஜநிலை திரும்பும்வரை இக் கடன்திட்டங்கள்நிறுத்திவைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

முன்னர் நடைமுறையில் இருந்த சகல கடன் திட்டங்களும் நிறுத்தப்பட்டு மட்டுப் படுத்தப்பட்ட அளவில் சில கடன் திட்டங்கள் கடந்த வருடம் குறுகிய காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. பின்னர் முற்றாக நிறுத்தப் பட்டு கடந்த வருட இறுதியில் மீண்டும் கடன் திட்டம் நடைமுறைக்குவந்தது. தற்பொழுது மீண்டும் அனைத்துக் கடன்திட்டங்களையும் முற்றாக நிறுத்திவைக்கும்படி இவ் வங்கியின் வடபிராந்திய அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

சிந்தனைக்கு

இன்னல் தாக்கும் போது
எச்சரிக்கையாக இருப்போம்
- ராபர்ட் பர்ட்டன்

# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 23-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2808
த பெ. எண் 05

## உணர்ந்தால் சரி!

''எதிர்வரும் யூன் 14ஆம் திகதிவரும்பொஸன் பூரணையுடன் நாட்டில வன்செயலுக்கு இறுதி முடிவு கட்டப்பட்டுவிடும்'' என்று சிறிலங்கா ஜனாதிபதியும்,

''விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடை பெறும் அரசாங்கம் முன் வைக்கும் ஓர் தீர்வுத் திட்டத்தை புலிகள் ஏற்கும் வரை இராணுவ நடவடிக்கை தொடரும்'' என சிறிலங்கா பிரதமரும் அறிவித்துள்ளார்,

பிரேமதாசாவும், விஜயதுங்காவும் பல தடவைகள் தாம் கலந்து கொள்ளும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் சிங்கள மக்களுக்கு புத்துணர்ச்சி அளிக்கும் வகையில் உரை நிகழ்த்தினாலும்,

விடுதலைப்புலிகளின் போர் தந்திரோபாய நடவடிக்கைகளினால் இவை முறியடிக்கப்படுகின்றன என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

இவர்கள் பிரச்சினை விரைவில் தீர்ந்து விடும் என்று தெரிவிக்கின்றார்களே தவிர அதனைத் தீர்க்க எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. அத்துடன் யாராலும் முன் வைக்கப்படும் சமாதான யோசனைகளும் இவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

அண்மையில் யாழ். வந்த குவேக்கர்ஸ் நல்லெண்ணத் தூதுக்குழுவினர் தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சினையில் சமரசம் செய்ய காமன் வெல்த் அமைப்புகள் ஆர்வம் கொண்டுள்ளன என்று தெரிவித்திருந்தனர்.

ஆனால் சிறிலங்கா அரசாங்கம் இது குறித்த விடயத்தில் அக்கறை கொண்டிருப்பதாக அறிவிக்கவில்லை.

இந்த அரசாங்கத்திற்கு இராணுவத் தீர்வொன்றின் மூலமே பிரச்சினைக்குத் தீர்வுகாண விருப்பம் இருப்பினும் அதற்கான அவர்களது தந்திரோபாயங்களும் உடைக்கப்பட்டுள்ளன.

தலைவர் வே. பிரபாகரனால் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ள போருபாய தந்திரங்கள் சிறிலங்கா அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடுவதாக உள்ளன.

சிறிலங்கா பாதுகாப்புப் படையில் 1992 ஆம் ஆண்டில் குறுகிய காலப்பகுதியில் ஏற்பட்ட ஆட்குறைப்பு ஆயுத இழப்பு இதனைத் தெளிவாக காட்டியிருக்கலாம்.

அத்துடன் சிறிலங்கா இராணுவத்திலிருந்து மூவாயிரம் பேர் பதவியை விட்டுச் சென்றுள்ளனர் என்று அண்மையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்தில் கூறியிருப்பதும் இராணுவத்தின் பலவீனமான நிலையை எடுத்துக் காட்டுவதாகும்.

இத்தகையதொரு நிலையில் சிறிலங்கா அரசாங்கம் அரசியல் தீர்வு காணவேண்டியுள்ள நிலைக்குத் தள்ளப்படும்.

தார்மீக அடிப்படையில் இவர்களுக்கு தமிழ் மக்கள் தரப்பில் இவை உணர்த்தப் பட்டும், பலனளிக்காமல் போயுள்ள பட்சத்தில் போர்த்தந்திரோபாயம் மூலமாகவே அவர்களுக்கு இவை உணர்த்தப்பட்டுக் கொண்டு வருகின்றன.

டி. பி. விஜயதுங்கா குறிப்பிட்டது போல அரசாங்கத்தால் முன் வைக்கும் ஒரு தீர்வுத் திட்டத்தை புலிகள் ஏற்கும் வரை இராணுவ நடவடிக்கை தொடரும் என அறிவித்துள்ளமையானது இன்னும் வேடிக்கையாக உள்ளது.

தீர்விற்காக முன் வைக்கப்பட்ட யோசனைகள் யாவும் அரசாங்கத்தால் நிராகரிக்கப் பட்டதே தவிர நன்றும் ஆலோசனைக்கு அல்லது கருத்தில் கூட எடுத்துக் கொள்ளப்படவில்லை.

இ. தொ. கா. தலைவர் தொண்டமானால் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் முன் வைக்கப்பட்ட யோசனைகளே இன்னும் கருத்தில் கொள்ளப்படாத ஒரு நிலையில் அரசாங்கத்தால் எவ்வாறு ஒரு தீர்வை முன் வைக்க முடியும்?

ஆகவே சிறிலங்கா அரச தரப்பிலிருந்து ஒரு தலைப்பட்சமாக வெளியிடப்படும் கருத்துக்களை தமிழர்கள் கருத்திற் கொள்ளமாட்டார்கள் என்பதோடு,

எமது சுதந்திரத்திற்கும், பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக இருக்கும் சிறிலங்கா அரசின் எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் பதிலடி கொடுப்பதற்கு தயாராக இருக்கும் விடுதலைப் புலிகளுக்கு மக்களும் உறுதுணையாகவே நிற்பர்.

சிறிலங்கா அரசின் தலைவர்களால் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் எவற்றையுமே தமிழ் மக்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதை அவர்கள் உணர்ந்தால் சரி.

# சிறுபான்மையினரின் நலம் பாதுகாக்கப்படல் வேண்டும்

**— காமினி லொக்குகே**

(கொழும்பு)

அமைச்சர் தொண்டமான் முன்வைத்துள்ள யோசனைகளை எதிர்ப்பவர்கள் மாற்று யோசனைகளை முன் வைக்க வேண்டும் என்று உல்லாசப் பயணத்துறை ராஜாங்க அமைச்சர் காமினி லொக்குகே கூறியுள்ளார். நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அவசரகால சட்டநீடிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் மேலும்;

சிங்களவர்கள், தமிழர்கள் போன்று ஏனைய சிறுபான்மையினரும் இந் நாட்டில் வாழ்கின்றனர். அவர்களது நலன்களும் பாதுகாக்கப்படல் வேண்டும். இனப்பிரச்சினை தொடர்பாக அமைச்சர் தொண்டமான் யோசனையொன்றை முன் வைத்துள்ளார். அந்த யோசனை பிழையானது என்று கூறுவோரே அதற்கு மாற்றாக சரியான யோசனையொன்றை முன் வைக்க வேண்டும் பலர் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண யோசனையொன்றைச் சமர்ப்பிக்காது அரசாங்கத்தையே குறைகூறியவண்ணம் காலத்தை கடத்தி வருகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

வங்கிப் பரீட்சைக்கு

## வங்கி ஊழியர்கள் மட்டுமே பங்கு கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியாளர்நிலையம் நடாத்தவுள்ள வங்கிச் சேவையாளர் பரீட்சைக்கு வங்கி ஊழியர்கள் மட்டுமே தோற்ற முடியும் எனவும் தனிநபர் எவரும்இப்பரீட்சைக்குத் தோற்ற முடியாது எனவும் இலங்கை வங்கிபிராந்தியமுகாமையாளர் அறிவித்துள்ளார்.

இதுவரை காலமும்கொழும்பில் நடைபெற்று வந்த மேற்படி பரீட்சை முதல் தடவையாக இம்முறை யாழ் மாவட்டத்தில் நடைபெறுவதற்கான ஒழுங்குகளை இலங்கை வங்கியின் பிராந்திய முகாமையாளர் மேற்கொண்டுள்ளார்.

கடந்த வியாழன் முதல் போதிய விளக்கமின்மையால் பல தனிப்பட்டவர்கள் இப்பரீட்சைக்கான விண்ணப்பங்களைப்பெற இலங்கை வங்கிக்கு வந்ததை அடுத்தே அவர் இவ்வாறு விளக்கமளித்துள்ளார். (ச)

## இந்து மகளிர் கல்லூரியில் பேடன்பவல் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

உலக சாரணிய இயக்கத்தின் தந்தையான சீமான் - சீமாட்டி பேடன்பவல் அவர்களின் பிறந்த நாளை நினைவு கூருமுகமான நிகழ்ச்சியொன்று கடந்த வியாழக்கிழமை யாழ் இந்துமகளிர் கல்லூரியில் இடம் பெற்றது.

ஆடம்பரமின்றி வெகு அமைதியாக பாடசாலை மட்டத்தில் கல்லூரியின் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் யாவரும் இணைந்து சேவை மனப்பான்மையுடன் சமூக நீதியை உருவாக்குவதற்கான பணியை மேற்கொள்வோமெனத் திட சங்கற்பம் செய்து கொண்டனர்.

## புதுவருடத்தை முன்னிட்டு கலை, விளை. போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும்தமிழ்ப் புதுவருட தினத்தன்று அரியாலையில் நடைபெற இருக்கும் சுதேசிய திருநாட் கொண்டாட்டத்தை ஒட்டி கலை, மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட உள்ளன.

இப்போட்டிகள் உள்ளூர் மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் நடாத்தப்பட இருக்கிறது.

மேற்படி போட்டிகளுக்கான விண்ணப்பங்களை அரியாலையில் உள்ள சனசமூக நிலையங்களிலும் தபால் அலுவலகங்களிலும் ஒரு ரூபா செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்களை பொதுச் செயலாளரான கா லோகேஸ்வரனிடம் பெற்றுக் கொள்ளலாம். (க)

## பராமரிப்பை அவதானிக்க இணைச் செயலாளர் விஜயம்

(கொழும்பு)

இந்திய அரசின் வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளரான ஆர். அபயங்கார் தற்சமயம் கொழும்பு வந்துள்ளார்.

தமிழகத்திலிருந்து இலங்கை திரும்பியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் பராமரிப்பு புனர்வாழ்வுக் கொடுப்பனவுகள் என்பன போன்ற விடயங்களை நேரில் அவதானிப்பதே இவரது விஜயத்தின் நோக்கம் என்று தெரியவருகின்றது.

## இழுவைப் படகுகள் சேதமுற்றநிலையில் உள்ளன

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்தில் பாவனையில் இருக்கும் அனைத்து இழுவைப் படகுகளும் சிறிது சேதமடைந்த நிலையிலேயே உள்ளன.

இந்த இழுவைப் படகுகளைத் திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. யாழ். செயலகமும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து மேற்படி நடவடிக்கைகளை ஆரம்பிக்க இருக்கின்றன. (க)

## தமிழகத்திலிருந்து கப்பல் குறித்த திகதி வரவில்லை

[மன்னார்]

தமிழ்நாட்டில் இருக்கும்மன்னார் அகதிகளை ஏற்றிக் கொண்டுஇராமானுஜம்கப்பல் கடந்த 20ஆம் திகதி வரவுள்ளதாக அறிவிக்கப்பட்ட போதும் கப்பல் எதிர்பார்த்தபடி வரவில்லை.

கடந்த வியாழனன்று இக்கப்பல் வந்து சேருமென மன்னார் உயர் அதிகாரிகளும் அகதிகளின் உறவினர்களும் காத்து நின்றபோதும். கப்பல் வருகை கைவிடப்பட்டதாக இறுதி நேரம் அறிவிக்கப்பட்டது.

யாழ். பல்கலையில் வெளிவாரிப்படிப்பு

## இரண்டாம் கட்ட ஏற்பாடு யாவும் பூர்த்தியாகியுள்ளது

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் வெகு விரைவில் கலை முதல் தேர்வு வர்த்தக முதல் தேர்வு மற்றும் விசேட பாட நெறிகளுக்கான இரண்டாம் வருட மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள இருக்கின்றது.

இதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வெளிவாரப் பட்டப்படிப்பு பிரிவு இரண்டாம் கட்டத்திற்கான பாடவிதானங்கள் மற்றும் சட்டவரைபுகளை வகுத்துக் கொண்டுள்ளது. இவை பல்கலைக் கழகத்தின் பேரவை மற்றும் மூதவையின் அங்கிகாரத்தையும் பெற்றுள்ளது.

எனவே 1992 அக்டோபர் மாதத்தில் தொடங்கும் கல்வி யாண்டில் வர்த்தக முதல் தேர்வு, கலை முதல் தேர்வு போன்ற துறைகளில் முதலாண்டு சித்தியடைந்த மாணவர்களும் ஏனைய பல்கலைக் கழகங்களில் முதலாண்டு சித்தி பெற்ற மாணவர்களும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முதலாண்டுசித்தி பெற்றமாணவர்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில தமது கல்வியைத் தொடருவதற்கு இப்போதுவாய்ப்புஏற்பட்டுள்ளது

விடுதலைப் புலிகள்

## கலை பண்பாட்டு கழகத்தின் கலை நிகழ்ச்சிகள்

(நமது நிருபர்)

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் யாழ். மாவட்டத்தினர் தென்மராட்சிப் பிரிவில் நடாத்தும் கலை நிகழ்ச்சிகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளன.

இன்று மாலை 7-30மணிக்கு இந்தநிகழ்ச்சிகள் நடைபெறும். விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் வடமராட்சிப் பிரிவினரின் செல்வானம் இசைக் குழுவினரின் ''எழுச்சிப் பாடல்களும்'' வலிகாமம் பிரிவினரின் ஆதரவில் உருவான ''சுதந்திரப் போர் வெல்லும்'' என்ற நாடகமும் இடம் பெறவுள்ளன. அன்பளிப்பாக பத்து ரூபாய் பெற்றுக் கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# …ழக அமைச்சரவையில் மாற்றம்; முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு

(சென்னை)

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தமது அமைச்சரவையில் மாற்றம் செய்துள்ளார். அவர் பதவிப் பொறுப்பை ஏற்ற இருநூறு நாட்களில்மூன்றாவது தடவையாக அமைச்சரவை மாற்றம் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த மாற்றத்தின்போது ரகுபதி அமைச்சரவையில் சேர்க்கப்பட்டு தொழிலாளர் நலத்துறை, வேலை வாய்ப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்பாக இப்பொறுப்பை வகித்த சி அரங்கநாயகத்திற்கு கல்வித்துறை வழங்கப்பட்டுள்ளது. கல்வித்துறை அமைச்சராக இருந்த ஆர். எம். வீரப்பனிடமிருந்து அவ் அமைச்சு பறிக்கப்பட்டு தற்போது பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவை மாற்றங்களை செல்வி ஜெயலலிதா நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளார்.

## உலகக் கிண்ண கிரிக்கட் போட்டி

# ஒன்பது ஓட்டங்களால் இந்தியா தோல்வி

ஆஸ்திரேலியாவில் பென்சன் ஹெட்சஸி உலகக் கோப்பைக்காக நடைபெறும் கிரிக்கட் போட்டிகளில் அவுஸ்திரேலியா அணிக்கு எதிராக நியூசிலாந்து அணியும், இந்திய அணிக்கு எதிராக இங்கிலாந்து அணியும் விளையாடின.

நியூசிலாந்து அணி முப்பத்தேழு ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா அணியை வென்றது. நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 6 விக்கட் இழப்பிற்கு 248 ஓட்டங்கள் பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 9 விக்கட் இழப்பிற்கு 236 ஓட்டங்களைப் பெற்றது. இந்திய அணி 50 ஓவர்களில் 227 ஓட்டங்களை மட்டுமே பெற்று இங்கிலாந்து அணியிடம் தோல்விகண்டது.

# இந்தியாவில் கூட்டணிக் குழு அதிகாரிகளுடன் பேச்சு

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்மு.சிவசிதம்பரம் தலைமையில் சென்ற கூட்டணிக் குழு இந்திய வெளிவிவகார அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி வெளியுறவு அமைச்சர் ஜெ என் டிக்ஸிற், இணைச் செயலர் அபயங்கர் ஆகியோரைச் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான நிலவரங்களையும், தமிழ்நாட்டு இலங்கை அகதிகள் பற்றியும் விரிவான பேச்சுவார்த்தை நடாத்தி உள்ளனர்.

## இராணுவ

எடுக்க வேண்டும். இந்தவருடத்திலாவது இதைச் செய்ய வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

நாட்டின் தென்பகுதியிலும் கடந்த இரண்டு மாதகாலத்தில் கொலை கொள்ளை போன்ற குற்றச் செயல்கள் இடம்பெற்றிருக்கின்றன. நிலைமை இவ்வாறே தொடருமானால் நாட்டின் எதிர்காலம் பாதிக்கப்படும் எனவே எதிர்காலச் சந்ததியின் நன்மை கருதி கடந்த காலத்தை மறந்து செயல்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வங்கிகளே

ளாதாரக் கொள்கைகளின் விளைவாக நாட்டின் நிதிநிறுவனங்கள், வங்கிகள், கூட்டுத்தாபனங்கள், கைத்தொழில் நிறுவனங்கள் அனைத்தும் சர்வதேச நிறுவனங்களுக்கும், உலகவங்கி சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றிற்கும் விற்கப்பட்டுவிட்டன. இப்படி விற்பதன்மூலமே அரசாங்கத்தை நடத்தஇவற்றிடமிருந்துகடன் வாங்கியுள்ளனர் என மேலும் அவர் தெரிவித்தார்.

ஐ. தே. க. அரசாங்கத்துக்கென தற்போது எதுவித தேசிய கொள்கையும் கிடையாது இவர்கள் மக்கள் நலன் மீது எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை.

அதன்காரணமாகவே அரசாங்க வங்கிகள் திறமையாக இயங்கவில்லை என்று அதன் சேவையாளர்கள்மீதும் கடன் பெற்றுள்ள மக்கள், விவசாயிகள் ஆகியோர் மீதும் அவர்கள் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை என்ற குற்றத்தைச்சுமத்தி அவற்றை தனியாரிடமும், வெளிநாட்டு நிறுவனங்களிடமும் ஒப்படைக்கத் தீர்மானித்துள்ளனர் என்றார்.

## திருகோணமலையில்

நிலையில் இந்திய அரசு தமிழ் நாட்டிலிருந்து அகதிகளைப் பலவந்தமாகத் திருக்கோணமலைக்குத் திருப்பியனுப்பி வருகிறது. இனரீதியான வன்முறை தலைதூக்கும் பட்சத்தில் தாயகம் திரும்பும் இந்த தமிழ்அகதிகள் பாதுகாப்பற்ற ஒரு ஆபத்தான சூழ்நிலையை எதிர்நோக்கலாம்.

# ஐந்து தமிழர்கள் படுகொலை

மூதூரில்சிறிலங்காஇராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஐந்து அப்பாவித்தமிழர்கள் உயிரிழந்தனர். நல்லையா இன்பராஜா (உப்பாறு, கிண்ணியா) செல்லையா பாக்கியராஜா, லோகேஸ்வரன், கனகரத்தினம் ராஜன், தம்பிராசா சத்தியசீலன் ஆகியோரே இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

வேலுப்பிள்ளை மோகன், தம்பிராசா சிவா என்னும் இருவர் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்தனர்.

சுசிலா (ஆலங்கேணி வயது 25) என்பவர் கைது செய்யப்பட்டு சிறிலங்கா இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டார்.

மறுதினம் திருக்குளம் மாத்தையா தோட்டம் என்னும் இடத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் வெள்ளைக்குட்டி நாகலிங்கம், கணேசலிங்கம் துரைநாயகம், நற்குணம் செல்வராசா, செபஸ்தியான் டயஸ் தருமராசா ஆகிய இளைஞர்களையும் இரவீந்திரன் ராணி என்ற பெண்ணையும் கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

கடந்த புதன்கிழமை பள்ளிக்குடியிருப்பு என்ற இடம் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டது. அங்கு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தினால் மார்க்கண்டு மாதவராஜா, சிவராசா சாம்பசிவம் ஆகியோர் காயமடைந்தனர்.

## அரசு காட்டிய

# கணக்குகள் உண்மையல்ல வங்கியாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

அரச வங்கிகளைத் தனியார்மயமாக்க அரசு காட்டிய கணக்கு வழக்கு உண்மைக்குப் புறம்பானது என அரசாங்க வங்கி ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் விதப்புரையின் தாக்கமே இதுவென்றும் அரசின் செயல் திட்டங்களுக்கு இவ் வங்கிகள் மீளப்பெறமுடியாததும் அரசின் கோலாகல வைபவங்களுக்கு நன்கொடையாக இவ் வங்கிகளிலிருந்து நிதி பெற்றமையும் பாரிய நிறுவனங்களுக்கு கோடிக் கணக்கில் கடன் கொடுத்தமையுமே இதற்குக் காரணம் ஆகும்.

இத் திட்டத்தை அரசுமீள் பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் 22 ஆயிரம்அங்கத்தவர்களைக் கொண்ட இச் சங்கம் வேலை நிறுத்தத்தில் இறங்கும் எனவும் இவ்வாறு வேலை நிறுத்தத்தில் இறங்கும் பட்சத்தில் அரசின் பொருளாதாரம் மந்த நிலையை அடையும் எனவும் அவர் அரசிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தமது நியாயபூர்வமான இந்த நடவடிக்கைக்கு ஏனைய தொழிற் சங்கங்களும் ஒத்துழைப்பு வழங்கும் என தான் எதிர்பார்ப்பதாகவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# மீண்டும் அரசியல் கட்சியாக ஜே. வி. பி. ஆவல்

(லண்டன்)

தென்னிலங்கையில் பயங்கரவாத இயக்கம்என வர்ணிக்கப்பட்ட ஜே வி. பி. இயக்கம் தம்மை அரசியல் கட்சியாக செயற்படவேண்டி தேர்தல் ஆணையாளருக்கு மனு செய்துள்ளதாக பி. பி. சி. யின் சிங்கள சேவை தெரிவித்தது.

இச்செய்தியை ஊர்ஜிதம் செய்வது போல் லக்திவ பத்திரிகையாளர் திரு. கசில் மாறவசோமதிலக பி. பி. சி. க்கு மேலும் விபரங்களைத் தெரிவித்தார்.

ஜே. வி. பி. இயக்கத்தினை சட்ட ரீதியாக அரசு தடைவிதிக்கவில்லையெனவும், அதன் நடவடிக்கைகளையே கட்டுப்படுத்தியதாகவும் இந்த மனு தொடர்பாக தேர்தல் ஆணையாளர் கவனமாக ஆராய்ந்து வருவதாகவும், இந்த மனுவிற்கு அரசு செவிசாய்க்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். இத்தருணத்தை அரசு தவறும் பட்சத்தில் தென்னிலங்கையில் சமாதானத்திற்கான ஓர் சந்தர்ப்பத்தை அரசு இழந்து விடும் என்பதை அது நினைவில் கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்தார்.

இன்று நாட்டிற்குத் தேவையானது சமாதானமேயாகும். எனவே அரசு ஜே. வி. பி. அங்கத்தவர்களை கைது செய்வதைத் தவிர்த்து இதற்கான ஒரு சாதகமான நிலையை ஏற்படுத்த வேண்டும். இதற்கு மாறாக அரசு நடந்து கொள்ளுமானால் மீண்டும் ஒரு பயங்கரவாத நடவடிக்கைகளையே அரசு விரும்புவதாக கருத முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## இனப்பிரச்சினையை தீர்க்க

பின் போது பேசிய பிரேமதாசா-

''அழிவு கரமான நடவடிக்கைகளில் ஈடுபடாமல் மகாசங்கத்தினரின் ஆலோசனைகளைப் பெற்று பேச்சுவார்த்தைகள் மூலமாக சமாதானமும் நீதியும் நிலைநாட்டப்பட வேண்டும்'' என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும் என்றும்,

''இருபது ஆண்டுகளாக அவர்களுக்கு இழைக்கப்பட்ட தீங்குகளை நாம் நினைவுபடுத்திப் பார்க்க வேண்டும். அவ்வேளையில் எம் மத்தியில் ஒற்றுமையில்லாதிருந்த காரணத்தினால் வெளிநாட்டுப் படையொன்று வடக்குக் கிழக்குப் பகுதியில் நிலை கொள்ள நேர்ந்தது. அரசாங்கத்தின் சட்டங்கள் அங்கு நடைமுறைப் படுத்தப்படவில்லை. இதன் காரணமாக ஏனைய பகுதிகளிலும் கூட அழிவுகரமான செயல்கள் நடைபெற ஆரம்பித்தன. இத்தகையதொரு நேரத்திலேயே தான் நிர்வாகப்பொறுப்பை ஏற்க வேண்டியிருந்ததாகவும்'' பிரேமதாசா தனதுரையில் குறிப்பிட்டுள்ளார்.

''இந்த நிலைமை மோதல்கள் மூலம் வெற்றிகொள்ளப்படவில்லை வர்த்தமுலைசித்த விவேகாராமையில் தான் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து இந்தியா அதன் படைகளை வாபஸ் பெறுவதற்கு நடவடிக்கைகளை எடுத்தது.''

வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு இப்போது மகா சங்கத்தினர் விஜயம் செய்யக் கூடியதாக இருக்கிறது. புத்த பெருமான் காட்டிய கருத் தொற்றுமை, கலந்தாலோசனை, சமரசம் ஆகிய மார்க்கங்களே இங்கு துணை புரிந்துள்ளன.

இப்பொழுது உருவாக்கப்பட்டுள்ள அமைதிபூர்வ சூழ்நிலையை மேலும் மேம்படுத்துவதற்கு நாம் பாடுபட வேண்டும். சிங்கள - பௌத்த மக்கள் புத்தபெருமானின் போதனைகளால் வழிநடத்தப்படுவார்கள். எனவே அவர்கள் வடக்கு கிழக்கு பிரச்சினைகளுக்கு வெற்றிகரமான தீர்வை முன்வைக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளார்கள்.

வடக்குக் கிழக்கில் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட வேண்டுமானால் அப்பகுதியில் வாழும் மக்களோடு எம்முடைய பரஸ்பர உறவுகளை மேலும் வலுப்படுத்த வேண்டும். இந்த இரண்டு மாகாணங்களும் பிளவுபட்டுவிட்டது என்பதை உலகத்திற்கு எடுத்துக் காட்டுவதற்காக வடக்குக் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இராஜினாமாச் செய்துள்ளார்கள் என்றும் பிரேமதாஸா குறிப்பிட்டுள்ளார்.

விகிதாசாரப்பிரதிநிதித்துவ முறை காரணமாக வடக்கையும் கிழக்கையும் பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் பாராளுமன்றத்திற்கு வந்துள்ளார்கள்.

இந்த பகுதிகளில் பெரும்பாலானவை 'பயங்கரவாதத்'திலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளன இலங்கையின் ஐக்கியத்தையும் பிரதேச ஒருமைப் பாட்டையும் பாதுகாப்பதும் எல்லாச் சமூகங்களும் சமாதானம் அமைதிமிக்க சூழலில் வாழ்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதும்தான் அரசாங்கத்தின் குறிக்கோளாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மீனவர் மீது துப்பாக்கிச் சூடு

பூநகரிப்பகுதியில் நேற்றும் சிறிலங்கா இராணுவத்தினர் நிகழ்த்திய துப்பாக்கிப்பிரயோகத்தில் இரண்டு மீன்பிடிப்படகுகள் முற்றாகச் சேதமடைந்தன.

இதேவேளை வடமராட்சி கடலில் மீன்பிடிப்பவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

# யூகோவிற்கு அமைதிப்படை

(ஜெனிவா)

யூக்கோசெலவாக்கியகு செல்லவிருக்கும் ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும்படைக்கு இந்திய இராணுவத்தைச் சேர்ந்த ஜெனரல் ஒருவர் தலைமையேற்கவுள்ளார்.

பல்வேறு நாடுகளில் இருந்தும் திரட்டப்படும்பதின்னான்காயிரம் பேர்களைக்கொண்ட இப்படைப்பிரிவு ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படை என்ற பெயரில் அழைக்கப்படவுள்ளது குரோஷியாவின் மூன்று முக்கியமான பகுதிகளில் நிறுத்தப்படும் இந்தப் படையணிகள் ஆரம்பத்தில் பன்னிரண்டு மாதங்களுக்கு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன. இப்படையினருக்கென அறுபது கோடி டாலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

விரைவிலேயே பணியில் ஈடுபடுத்தப்படவுள்ள இப்படையினர், ஐ. நாவின் பாதுகாப்பிலுள்ள பகுதிகளில் மக்கள் படையினரின் ஆயுதங்களைக் களைவதுடன். குரோஷியாவிலிருந்து யூக்கோ சமஷ்டி இராணுவப் பிரிவுகள் விலகிச் செல்வதையும் மேற்பார்வையிடவுள்ளனர்.

## 3-ம் உலகில்

மேலும் கூறுகையில் வரையறுக்கப்பட்டுள்ள மூலவளங்களைக் கொண்டு கட்டுப்பாடில்லாமல் பெருகிவரும் சனத்தொகையை எவ்வாறு திட்டமிட்டுப் போஷிப்பது என்பதே மூன்றாம் உலக நாடுகள் இன்று எதிர்நோக்கும் பெரும் பிரச்சினை எனவும் குறிப்பிட்டார்.

## அரசாங்க

கொண்டு செல்லப்பட்டனர். மண்டூர், சித்தாண்டிப்பகுதிக்கு நிவாரணம் பெறச்சென்ற தமிழ் மக்களும் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது